முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு 1 வது சாட்சி (பி.வா.சா.1)

அ.வ.எண்.1/2019

| | | |
|---|---|---|
| பெயர் | – | அன்பரசி |
| த/பெ | – | சுயம்பு |
| கிராமம் | – | பொன்னார்குளம் |
| தாலுகா | – | இராதாபுரம் |
| தொழில் | – | விவசாயம் |
| வயது | – | 53 |

1873ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 06ம் நாள் திங்கள்கிழமை மேற்படியாரிடமிருந்து சத்திய பிரமாணத்தின் பெயரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவேன். நான் ஏற்கனவே என்னுடைய சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்து விட்டேன். தற்போது எனது தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

இடைக்கால மனு எண்.06/2025 அனுமதிக்கப்பட்டதன் பேரில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

| பி.வா.சா.ஆ. | தேதி | ஆவணம் | விபரம் |
|---|---|---|---|
| 3 | 26.10.1987 | இராதாபுரம் சார்பதிவக ஆவண எண்.1022/1987 கீழ் ஆறுமுக நாடார் அவரது சொத்துக்களை பொறுத்து ஏற்படுத்திய அடமான ஆவணம் | அசல் |

MITHUNA A KAISER Digitally signed by MITHUNA A KAISER Date: 2025.10.06 17:22:11 +0530

| | | | |
|---|---|---|---|
| 4 | 24.03.2000 | இராதாபுரம் சார்பதிவக ஆவண எண்.329/2000 கீழ் ஆறுமுக நாடார் ஏற்படுத்திய அடமானத்தை அவரது மனைவி அமிர்தகனி செல்லடித்து திருப்பியதற்கான இரசீது | அசல் |
| 5 | 04.09.2012 | 03.11.1999 தேதியில் இறந்ததற்கான ஆறுமுக நாடாரின் இறப்பு சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| 6 | 04.09.2012 | 08.12.2011 தேதியில் இறந்ததற்கான அமிர்தகனியின் இறப்பு சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| 7 | 23.08.2012 | ஆறுமுக நாடாரின் வாரிசு சான்றிதழ் | அசல் |
| 8 | 21.09.2012 | அமிர்தகனியின் வாரிசு சான்றிதழ் | அசல் |

வா.சா.ஆ.7 ஆவணம் வாதி தரப்பு வழக்கறிஞரால்– வாதியை மறைத்து மோசடியாக பெறப்பட்ட வாரிசு சான்றிதழ் என ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

பி.வா.சா. 1 முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.

(வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.10.06 17:22:17 +0530